05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# APLIKASI AGAMARABU DALAM CERPEN ANTOLOGI PERAVAI KATHAIGAL

VIMALAH ARUMUGAM

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**TESIS INI DIKEMUKAKAN BAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEHI IJAZAH SARJANA DENGAN KEPUJIAN (KESUSASTERAAN TAMIL) MOD PENYELIDIKAN**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## பேரவைக் கதைகளில் அகமரபு

இந்த ஆய்வானது கடந்த 2006 முதல் 2016 வரை வெளியான பேரவைக் கதைகளில் அகமரபு கூறுகளை ஆராய்வதே ஆகும். பேரவைக் கதைகள் என்றால் மலேசிய எழுத்தாளர்களால் உருவான தரமான பரிசு பெற்ற கதைகள் உள்ளடக்கிய பதிப்பாகும்.இந்த ஆய்வின் முதல் நோக்கம் 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் அகமரபைக் கண்டறிதல் ஆகும். இரண்டாவது 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் அகமரபுக் கூறுகளை ஆராய்தல் மற்றும் தொல்காப்பியர் கால அகமரபு கூறுகள் இக்கால அகமரபு கூறுகளோடு எவ்வகையில் வேறுபடுகின்றன என்பதை ஆராய்ந்து விளக்குதல் ஆகும். இவ்வாய்வில் அகமரபு கூறுகளான களவு, கற்பு, தலைவன் இயல்பு, தலைவி இயல்பு மற்றும் தலைவன் தலைவிக்குரிய இயல்புகள் பேரவைக் கதைகளில் ஆராய்ந்து விளக்கப்படும். இந்த ஆய்வு தொல்காப்பியர் கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. கடந்த 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகள் ஆய்வில் உட்படுத்தப்பட்டது. ஆய்வின் தரவுகள் யாவும் பகுப்பாய்ந்து விளக்கப்பட்டது. ஆய்வில் முடிவில் எழுத்தாளர்கள் தங்களின் படைப்புகளில் அகமரபு கூறுகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆய்வு தரவுகள் யாவும் தொல்காப்பியர் காலத்தில் இருந்த களவுக்கும் கற்புக்கும் இன்றைய காலத்தில் இருந்து வரும் களவுக்கும் கற்புக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் மேலும் உறுதிசெய்துள்ளது.


**கலைச்சொல் : அகமரபு, பேரவைக் கதைகள்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# APLIKASI AGAMARABU DALAM CERPEN ANTOLOGI PERAVAI KATHAIGAL

Kajian ini bertujuan untuk mengkaji aplikasi teori 'agamarabu' dalam cerpen peravai kathaigal yang telah diterbitkan sejak tahun 2006 hingga 2016. Peravai kathaigal merupakan koleksi cerpen yang terpilih menerusi pertandingan anjuran Universiti Malaya. Objektif kajian ini adalah untuk mengenal pasti 'agamarabu' dalam 'Peravai Kathaigal' di antara tahun 2006 hingga 2016. Kedua, mengkaji aspek unsur 'agamarabu' dalam 'Peravai Kathaigal' dan yang ketiga mengenal pasti perbezaan pada zaman Tholkappiyar dan pada masa kini dari aspek 'kalavu' dan 'karpu'. Kajian juga menganalisis cerpen Peravai Kathaigal dari segi unsur seperti kalavu, karpu, sifat lelaki sebagai ketua, sifat perempuan sebagai ketua, dan juga sifat lelaki dan juga perempuan sebagai ketua dalam rumah tangga. Ini merupakan kajian kualitatif dan dibuat berdasarkan pendekatan kajian perpustakaan. Berdasarkan metodologi ini, sumber primer dikumpulkan dan dianalisis bersama sumber sekunder dan maklumat-maklumat yang berkait rapat dengan kajian. Kajian ini diperkukuh lagi dengan pengaplikasian teori Tholkappiyam. Sumber kajian melibatkan cerpen-cerpen yang diterbitkan dari tahun 2006 hingga 2016. Data kajian telah dianalisis dengan menggunakan analisis deskriptif. Analisis deskriptif menjelaskan hubungkait antara cerpen dengan unsur-unsur Agamarabu. Hasil kajian menunjukkan bahawa terdapat penulis-penulis tempatan mengaplikasikan unsur-unsur agamarabu dalam karya mereka. Dapatan kajian juga membuktikan bahawa terdapat persamaan dan perbezaan antara era Tholkappiyar dengan masa kini dari segi unsur cinta dan perkahwinan. Kesimpulan daripada kajian ini menunjukkan bahawa penulis-penulis tempatan dapat mengaplikasikan teori 'agamarabu' dalam cerpen peravai kathaigal yang telah diterbitkan sejak tahun 2006 hingga 2016 dengan lengkap.

UPD DONE MyTO SCAN

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# UTILIZATION OF AGAMARABU IN PERAVAI KATHAIGAL SHORT STORIES

This study aims to examine the application of ‘agamarabu’ theoretical concepts in ‘Peravai Kathaigal’ short stories which were published from 2006 to 2016. ‘Peravai kathaigal’ is a collection of short stories selected through a competition organized by the University of Malaya. The objective of this study is to identify 'agamarabu' in 'Peravai Kathaigal' from 2006 to 2016. Secondly, it is to study the elements of 'agamarabu' in 'Peravai Kathaigal' and the third is to discern the differences during the Tholkappiyar era and in the present time from the aspect of 'kalavu' and 'karpu'. This study also analyzes the Peravai Kathaigal short stories in terms of elements such as kalavu, karpu, depicting male character as head, female character as forewoman, as well as male and female as the head of household. It is a qualitative study and is based on a library research approach. By referring to this methodology, primary sources were collected and analysed together with secondary sources and information closely related to the study. This study is further reinforced by the utilization of Tholkappiyam theory. The source of this study involved short stories published from 2006 to 2016. Furthermore, the data were analysed via descriptive analysis. Descriptive analysis describes the relationship between short stories and Agamarabu elements. The results established the evidence that local writers applied ‘agamarabu’ elements in their stories. The findings also manifest that there are similarities and differences between the Tholkappiyar era and the present day in terms of love and marriage elements. The conclusion of this study conveys that local writers were able to apply the 'agamarabu' theory absolutely in the 'Peravai Kathaigal' short stories published since 2006 until 2016.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| நன்றியுரை | iii |
| ஆய்வுச்சுருக்கம் | iv |
| Abstrak | v |
| Abstract | vi |
| பொருளடக்கம் | viii |
| வரைப்படப் பட்டியல் | x |
| அட்டவணைப் பட்டியல் | xi |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 1 அறிமுகம்**

| | | |
|---|---|---|
| 1.1 | முன்னுரை | 1 |
| 1.2 | ஆய்வுப் பின்னணி | 4 |
| 1.3 | ஆய்வுச் சிக்கல் | 5 |
| 1.4 | ஆய்வு நோக்கம் | 8 |
| 1.5 | ஆய்வு வினா | 8 |
| 1.6 | ஆய்வு நன்மைகள் | 9 |
| 1.7 | ஆய்வு எல்லை | 11 |
| 1.8 | ஆய்வுச் சான்றாதாரங்கள் | 12 |
| | 1.8.1 முதன்மை ஆதாரம் | |
| | 1.8.2 துணைமை ஆதாரம் | |
| 1.9 | கலைச்சொல் விளக்கம் | 13 |
| | 1.9.1 பேரவைக் கதைகள் | 13 |
| | 1.9.2 அகமரபு | 14 |
| 1.10 | தொகுப்புரை | 18 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 2 முந்தைய ஆய்வுகள்


2.1 முன்னுரை 19
2.2 அகமரபு ஒட்டிய ஆய்வேடுகள் 20
2.2.1 பேரவைக் கதைகள், களவு மற்றும் கற்பு ஒட்டிய ஆய்வுகள் 25
2.3 தொகுப்புரை 26


இயல் 3 ஆய்வு நெறிமுறை


3.1 முன்னுரை 28
3.2 ஆய்வு அணுகுமுறை 29
3.3 ஆய்வு வடிவமைப்பு 29
3.4 ஆய்வுக் கட்டமைப்பு 30
3.5 தரவு சேகரிக்கும் முறை 32
3.5.1 மதிப்பீடு 32
3.5.2 பகுப்பாய்வு 32
3.5.3 விளக்கமுறை ஆய்வு 33
3.6 ஆய்வு நடைமுறை 33
3.7 ஆய்வுக் கோட்பாடு 35
3.7.1 கோட்பாட்டு வடிவமைப்பு 38
3.8 தொகுப்புரை 39


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இயல் 4 பகுப்பாய்வுகளும் கண்டுபிடிப்புகளும்


4.0 முன்னுரை 40
4.1 களவு 44
4.1.1 கைக்கிளை 45
4.1.2 பாங்கன் கூட்டம் 65
4.1.3 பெருந்திணை 82
4.1.4 உடன்போக்கு 92
4.2 கற்பு 94
4.2.1 கற்பின் வகைகள் 95
4.2.2 கற்பின் இயல்பு 98
4.2.3 கற்புப் பிரிவு 100
4.3 தலைவன் இயல்பு 105
4.3.1 அறிவு 106
4.3.2 ஆற்றல் 107
4.3.3 புகழ் 110
4.3.4 கொடை 111
4.3.5 பழிப்பாவங்களுக்கு அஞ்சுதல் 112
4.3.6 ஆராய்தல் 114
4.3.7 கலங்காது துணிதல் 117
4.3.8 நலம் பாராட்டுதல் 117
4.4 தலைவி இயல்பு 120


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

4.4.1 அச்சம் 121
4.4.2 நாண் 123
4.4.3 மடம் 125
4.4.4 பயிர்ப்பு 126
4.4.5 சுற்றும் ஓம்புதல் 127
4.5 தலைவன் தலைவிக்குரிய பொதுவான பண்புகள் 131
4.5.1 அழுக்காறு 131
4.5.2 கொடுமை 133
4.5.3 வியப்பு 136
4.5.4 புறங்கூறுதல் 137
4.5.5 கடுஞ்சொற் கூறல் 137
4.5.6 பொச்சாப்பு 139
4.5.7 முயற்சியின்மை 139
4.5.8 தன்குடிப் பிறப்பினாலும் தம்மை மதித்து இன்புறல் 140
4.5.9 ஏழைமை 143
4.5.10 ஒப்புமை 144

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 146
5.2 கலந்துரையாடல் 147

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**துணைநூற் பட்டியல்** 155

**பின்னிணைப்பு** 159

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## வரைப்படப் பட்டியல்


| வரைபடம் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு வடிவமைப்பு | 30 |
| 3.2 | ஆய்வுக் கட்டமைப்பு | 31 |
| 3.3 | ஆய்வு நடைமுறை | 34 |
| 3.4 | ஆய்வுக் கோட்பாட்டுக் கட்டமைப்பு | 38 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# அட்டவணை பட்டியல்


| அட்டவணை | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1.1 | 2001 முதல் 2010 வரியிலான விவாகரத்து எண்ணிக்கை | 7 |
| 1.2 | 2015-ஆம் ஆண்டு குடும்ப வன்முறைகள் எண்ணிக்கை | 10 |
| 4.1 | 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் அகமரபுக் கூறுகள் | 43 |
| 4.2 | அகமாந்தர்கள் | 68 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

பேரவைக் கதைகள் என்பது மலேசிய எழுத்தாளர்களால் உருவாக்கப்படும் தரமான பரிசு பெற்ற கதைகள் உள்ளடங்கிய பதிப்பாகும். ஒவ்வொரு ஆண்டும் மலாயா பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவையின் ஏற்பாட்டில் பேரவைக் கதைகள் எனும் சிறுகதைப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. பேரவைக் கதைகள் எனும் சிறுகதைப் போட்டி கடந்த 28 ஆண்டுகளாகச் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பொதுவாகச் சிறுகதையின் கருப்பொருள்களில் ஓர் எழுத்தாளரின் அனைத்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலட்சியங்களும் அமையப் பெற்றிருக்கும். அதுமட்டுமல்லாமல் எழுத்தாளர்கள் பேரவைக் கதைகளில் பல துணைக் கருத்துகளையும் தங்களின் படைப்பில் இணைத்துக் கொண்டுள்ளனர். அவை காதல், திருமணம், கல்வி, வறுமை, மற்றும் பெற்றோர்களின் அர்ப்பணிப்பு போன்றவையாகும். வாசகர்களின் கவனத்தையும் அவர்களின் ஆர்வத்தையும் அதிகரிக்க, சிறந்த கருப்பொருளே அதற்குச் சான்று (கெம்ப்டப், 1971, ப.38).

ஒவ்வொரு சிறுகதையும் படிப்பவர்க்கு ஒரு முக்கியச் செய்தியையோ விழிப்புணர்வையோ கொடுக்கும். எழுத்தாளர்கள் இத்தகைய செய்திகளை எழுத்தாளர்கள் படைப்பில் இருக்கும் கருப்பொருள் வாயிலாக வாசகர்களுக்கு மறைமுகமாகத் தெரிவிக்கின்றனர். எழுத்தாளர்கள் நேரடியாக எதிர்கொண்ட சிக்கல்கள், சம்பவங்கள் அல்லது மறைமுகமாக அவர்கள் பார்த்து, கேட்டு உணர்ந்த சம்பவங்களை மையமாக வைத்தே சிறுகதை அமைந்திருக்கும். சிறுகதை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், சுற்றுச் சூழலையும் மற்றும் அவர்களின் சிந்தனைப் போக்கையும் மிகத் தெளிவாகச் சித்திரிக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பண்டைத் தமிழர்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையை மிகப் பெரிய வரப் பிரசாதமாக எண்ணி வாழ்ந்தனர். வாழ்க்கை என்பது அறம், பொருள், இன்பம் போன்ற முப்பொருளைக் கொண்டுதான் இயங்கிக் கொண்டிருக்கின்றது (கார்த்திகேயன்,2008;9). முப்பொருளில் ஒன்றான இன்பத்தையே அகத்திணை என்கிறோம். பண்டைய தமிழ் மக்கள் தங்களின் வாழ்வில் சில குறிக்கோள்களை அடிப்படையாக வைத்திருந்தனர். அவை அறநெறியில் பொருளீட்ட வேண்டும், மனமொத்த ஆடவரும் பெண்டிரும் கூடி இல்லறம் நடத்த வேண்டும், விருந்தினர்க்கு உதவ வேண்டும், மற்றும் பிள்ளைகளைப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெற்று மகிழ வேண்டும். மக்களின் அகவாழ்வு மரபும் நெறியும் மிக்கதாக இருந்தது.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் பொருளதிகாரம் ஆகிய மூன்று உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. எழுத்தும் சொல்லும் மொழியை வலியுறுத்துகின்றன (இலக்குவனார், 2009, ப.20). மொழியின் சிறப்பு நிலைத்திருக்க அம்மொழியில் உரையும் தோன்றுதல் பெரும் பங்காற்றுகிறது. பொருளதிகாரம் வாழ்க்கைப் பொருளை உணர்த்துகிறது. களவியலும் கற்பியலும் பொருளதிகாரத்தில் உள்ள பகுதிகளாகும். களவும் கற்பும் சேர்வதையே கைகோள் என்கிறோம். ஐந்திணை களவு கற்பு எனும் இரண்டு ஒழுக்கங்களைக் கைகோள் என்கிறோம் (வெள்ளைவாரணம், 1983, ப.29).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இன்றைய காலகட்டத்தில் அகமரபு சார்ந்த மலேசியச் சிறுகதைகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. அகமரபை எழுத்தாளர்கள் கதாபாத்திரங்களின் வாயிலாக மிகச் சிறப்பாகச் சித்திரிக்கின்றனர். களவுப் புணர்ச்சியில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கன் கூட்டம், மற்றும் பாங்கியற் கூட்டம், போன்ற வகைகளைக் கொண்ட காதல் ஒழுக்கம் இல்வாழ்க்கையில் முடியும். அதன் பின்னரான வாழ்க்கை ஒழுகலாறுகளை விளக்குவது கற்பியலாகும். கற்பியல் உள்ளடக்கிய பெருந்திணைகளான கூடல், பிரிதல், ஊடல், இருத்தல், மற்றும் இரங்கல் போன்ற பெருந்திணைகளை எழுத்தாளர்கள் தங்களின் சிறுகதைகளில் மிக அழகாக உட்புகுத்தியுள்ளனர். கற்பிற் புணர்ச்சி என்பது குரவரிற் புணர்ச்சி வாயிலிற் கூட்டம் என இரு வகைப்படும் (வெள்ளைவாரணம், 1983, ப.13).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இவ்வியலில் ஆய்வப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நன்மை, ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள், மற்றும் முக்கியக் கலைச்சொல் விளக்கம், போன்றவை விளக்கப்படவுள்ளன.

## 1.2 ஆய்வுப் பின்னணி

இன்றைய காலகட்டத்தில் காதல் முறிவு, திருமண முறிவு போன்ற செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. முதல் சந்திப்பிலேயே காதல் மற்றும் பழகிய சில நாட்களில் தலைவன் தலைவி ஒருவருக்கொருவர் சேர்ந்து வாழ்ந்தால் தங்கள் வாழ்க்கை சிறப்பாக அமையும் என்ற எதிர்பார்ப்பு ஏற்படுகின்றது. சில களவுப்புணர்ச்சி ஓரிரு காரணங்களால் தொடர முடியாமல் போய்விடுகிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

காதலில் திளைத்த ஆண் பெண் இருவரும் தங்களின் வாழ்க்கையைப் பிறர் அறியும்படி செய்ய இல்வாழ்க்கையில் ஈடுபட முற்படுவர். திருமணத்தில் இணையும் பந்தத்தையே தொல்காப்பியர் கற்பு என்கிறார் (இலக்குவனார், 2009, ப.135). ஆண் பெண் இருவரும் சில கட்டுப்பாடுகள் நிறைந்த வாழ்க்கையில் பயணிப்பதையே கற்பு என்கிறோம். ஆனால், இன்று ஆங்காங்கே முன்னோர்கள் முன் நின்று வாழ்த்திய திருமணமும் கோட்பாடுகள் நிறைந்த பந்தமும் கூட பாதியிலேயே முறிவுக்குள்ளாகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சமுதாயத்தில் நிலவும் களவு மற்றும் கற்பை மையமாகக் கொண்டு மலேசிய எழுத்தாளர்கள் அதிக அளவில் சிறுகதைகளைப் படைத்து வருகின்றனர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இதனை மையமாக வைத்தே பேரவைக் கதைகளில் மலேசியச் சிறுகதைகளில் அகமரபை அடையாளங்காணுவதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது.

அன்றைய காலங்களில் களவும் கற்பும் நெறி மிக்கவையாக இருந்தன. தலைவனும் தலைவியும் கண்களால் மட்டுமே உறவாடி தங்களின் அன்பைப் பரிமாறிக் கொண்டனர். அக்கால வாழ்க்கை முறையில் உள்ள புரிதல்கள் தற்கால மக்களிடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தவே இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## 1.3 ஆய்வுச் சிக்கல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இன்றைய காலகட்டத்தில் ஆணும் பெண்ணும் சந்தித்துக் கொள்ள பல கோணங்களில் வாய்ப்பைத் தேடுகின்றனர். தொல்காப்பியர் அன்றே தலைமக்கள் கூடும் புணர்ச்சியை நான்கு வகையாகக் குறிப்பிட்டுள்ளார். அவை இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கன் கூட்டம் மற்றும் பாங்கியிற் கூட்டம் ஆகும். இன்றைய களவு சார்ந்த சிறுகதைகளில் எழுத்தாளர்கள் பலர் தொல்காப்பியர் கூறிய தலைமக்கள் கூடும் புணர்ச்சியையே மையமாகக் கொண்டு எழுதியுள்ளனர்.

அன்று தலைவனும் தலைவியும் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்து கொள்ளவே பல தடைகளைத் தாண்டக் கூடும் புணர்ச்சியில் ஈடுபட்டனர். அவர்கள் இந்த வாய்ப்பினை நழுவ விடாமல் மனம் விட்டுப் பேசுவர். ஆனால், இன்றோ பல நாட்கள் பழகியும் காதல் ஈடேறவில்லை. சில சிறுகதைகளில் ஆணும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பெண்ணும் ஒருவருக்கொருவர் காதலர்களாகப் பழகியும் இறுதியில் பிரிந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இருவரும் வேறொருவரை மணந்து கொள்கின்றனர்.

அகமரபு என்பது களவியலும் கற்பியலும் சேர்வதே ஆகும். தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் மற்றும் பொருளதிகாரம் போன்ற உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. களவியலும் கற்பியலும் பொருளதிகாரத்தில் அடங்குபவை.

மற்றவர் அறியாத வண்ணம் மறைமுகமாக நடக்கும் ஒழுக்கச் செயலே களவு எனப்படுகிறது. ஒத்த தன்மையுடைய காதலனும் அவ்வாறான தன்மையுடைய காதலியும் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டு அன்பின் பால் காதலில் திளைப்பர். இந்த இன்பமான காதல் ஒழுகலாறுகளே களவு எனப்படுகிறது. சாதி, மதம் என்று பாராமல் அன்பின் ஊடே காதல் மலர்கிறது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பிறர் அறியும் வண்ணம் நிகழும் அன்பு வாழ்க்கையே கற்பு எனப்படும். இன்றைய காலங்களில் அதிகமான காதல் முறிவுகள் மற்றும் திருமண முறிவுகள் ஏற்படுகின்றன. மகளிர், குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சிடமிருந்து கிடைக்கப்பட்ட தகவலின்படி நாட்டில் ஒவ்வொரு பதினைந்து நிமிடத்திற்கும் ஒரு தம்பதியினர் விவாகரத்துச் செய்துக் கொள்கின்றனர். கீழ்க்கண்ட அட்டவணை கடந்த 2001 முதல் 2010 வரையிலான விவாகரத்து எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அட்டவணை 1.1

*2001 முதல் 2010 வரையிலான விவாகரத்து எண்ணிக்கை*

| எண் | மாநிலம் | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பெர்லிஸ் | 186 | 226 | 253 | 164 | 228 | 326 | 309 | 458 | 502 | 523 |
| 2 | கெடா | 1549 | 1133 | 1085 | 1474 | 1737 | 2006 | 2188 | 2407 | 2749 | 2623 |
| 3 | பினாங்கு | 717 | 911 | 925 | 916 | 913 | 813 | 917 | 937 | 1162 | 1044 |
| 4 | பேராக் | 1103 | 1975 | 1363 | 1508 | 1475 | 1577 | 1551 | 1951 | 1790 | 2223 |
| 4 | சிலாங்கூர் | 1870 | 1977 | 3158 | 3136 | 3030 | 3421 | 3685 | 4069 | 4614 | 5342 |
| 5 | கோலாலும்பூர் | 721 | 798 | 885 | 1296 | 1250 | 1423 | 1459 | 1444 | 1637 | 1721 |
| 6 | நெகிரி செம்பிலான் | 564 | 629 | 684 | 638 | 807 | 867 | 907 | 1054 | 1243 | 1343 |
| 7 | மலாக்கா | 475 | 530 | 589 | 553 | 612 | 726 | 758 | 889 | 923 | 1138 |
| 8 | ஜொகூர் | 963 | 1627 | 1612 | 1690 | 1521 | 2001 | 2057 | 2329 | 3353 | 2793 |
| 9 | பகாங் | 1042 | 894 | 917 | 616 | 1505 | 1541 | 1502 | 1719 | 1959 | 2140 |
| 10 | திரங்கானு | 1046 | 813 | 897 | 1172 | 1285 | 1232 | 1537 | 1341 | 1883 | 1273 |
| 11 | கிளந்தான் | 2042 | 1472 | 1926 | 1952 | 1900 | 2014 | 2257 | 2266 | 2478 | 2573 |
| 12 | சரவாக் | 602 | 634 | 652 | 826 | 820 | 974 | 910 | 1076 | 963 | 1511 |
| 13 | சபா | 444 | 257 | 514 | 711 | 582 | 935 | 1040 | 746 | 2548 | 1704 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.4 ஆய்வு நோக்கம்

பேரவைக் கதைகளில் அகமரபு எனும் இவ்வாய்வில் கீழ்க்கண்ட மூன்று ஆய்வு நோக்கங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன:-

i. 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் அகமரபைக் கண்டறிதல்.

ii. 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் அகமரபுக் கூறுகளை ஆராய்தல்.

iii. தொல்காப்பியர் கால அகமரபு கூறுகள் இக்கால அகமரபு கூறுகளோடு எவ்வகையில் வேறுபடுகின்றன என்பதை ஆராய்ந்து விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.5 ஆய்வு வினா

இவ்வாய்வின் இறுதியில் கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் காணப்படும்.

i. 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் அகமரபு காணப்படுகிறதா?

ii. 2006 முதல் 2016 வரை வெளிவந்த பேரவைக் கதைகளில் காணப்படும் அகமரபுக் கூறுகள் யாவை?

iii. தொல்காப்பியர் காலத்தில் இருந்த களவுக்கும் கற்புக்கும் இன்றைய காலத்தில் இருந்து வரும் களவுக்கும் கற்புக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு நன்மைகள்

இந்த ஆய்வு ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்க்கை நெறியினை உணர்த்துகிறது. அவரவர் வாழ்க்கைக்குரிய தெளிவுரை இந்த ஆய்வின் வழி வெளிப்படுத்தப்படுகின்றது. காதலர் குறியிடத்தில் பிறர் அறியாது கண்டு வந்த ஒழுக்கமே களவு எனப்படுகிறது (அன்பழகன், 1993, ப.33). களவு ஒழுக்கத்தின் போது ஆணும் பெண்ணும் தங்களின் நட்பு வரையறுக்கப்பட்ட எல்லைக்குட்பட்டுள்ளதா இல்லையா என்பதை இந்த ஆய்வின் வாயிலாக நினைவுறுத்தப்படுகிறது.

ஆண் பெண் ஈர்ப்பு இல்லையானால் உயிர்த்தோற்றம் என்ன என்பதையும் மாந்தரிடையே நிகழும் அந்த ஈர்ப்பு உள்ளப் பிணைப்பாக உருப்பெறாவிட்டால் பண்பாடும் நாகரிகமும் உருவாகாது (அன்பழகன், 1993, ப.33). இதனையே பாரதி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

> "காதலினால் மானுடர்க்குக் கல்வி யுண்டாம்
> கல்வியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
> காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்,
> கானம் உண்டாம் சிற்பமுதல் கலைகள் உண்டாம்"
> ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
> அது அன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்"
> (பாரதியார் கவிதைகள், 1990, ப.116)

என்று காதலின் புகழ் எனும் தன் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்.

அனைவரும் அறிந்ததாக நடைபெறுவதே கற்பு என்கிறார் (அன்பழகன், 1993, ப.34). ஒருவருக்கொருவர் உறுதுணையாக நின்று தோழமைத்துவத்துடன் வாழும் குடும்ப வாழ்க்கை ஒரு சிறந்த இல்வாழ்க்கை. பொறாமை, சந்தேகம், வெறுப்பு ஆகியவை கற்பு ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும். தொல்காப்பிய காலத்தில் கணவன் மனைவியிடையே எழும் குடும்ப விரிசல்கள் அவர்களிடையே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பிரிவினையை ஏற்படுத்தவில்லை. ஆனால், இன்று ஒவ்வொரு சிக்கலுக்கும் விவாகரத்துக் கோரி நிற்கும் தம்பதியர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. நாளுக்கு நாள் குடும்ப வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அட்டவணை 1.6, மகளிர், குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள 2015ஆம் ஆண்டில் நாட்டில் ஏற்பட்டுள்ள குடும்ப வன்முறைகளின் புள்ளி விவரங்களைக் காட்டுகின்றன.

அட்டவணை 1.2

*2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட குடும்ப வன்முறைகள் எண்ணிக்கை*

| இனம் | | | ***மொத்தம்*** |
|---|---|---|---|
| | ஆ | பெ | |
| முஸ்லிம் | 18 | 379 | 397 |
| சீனர் | 5 | 59 | 64 |
| இந்தியர் | 9 | 108 | 117 |
| மற்ற இனத்தவர்கள் | 0 | 2 | 2 |
| மலேசியா குடியுரிமை அல்லாதவர்கள் | 1 | 9 | 10 |
| ***மொத்தம்*** | 33 | 557 | 590 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், இந்த ஆய்வு வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களை மன தைரியத்தோடு எதிர்கொள்ள தூண்டுகோலாக அமைகிறது. பேரவைக் கதைகளில் அகமரபு எனும் இந்த ஆய்வின் மூலம் பேரவைக் கதைகளில் எத்தகைய களவும் கற்பும் வர்ணிக்கப்பட்டுள்ளது என்பது ஆராயப்படும். களவு ஒழுக்கத்தின் போது ஏற்படும் சிக்கல்களும் கற்பு ஒழுக்கத்தின் போது உருவாகும் பல விதமான சிக்கல்களும் முன்வைக்கப்படுகின்றன. ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் உருவாகின்ற இடர்களைக் கண்டு துவண்டு விடாமல் மன தைரியத்தோடு எதிர்கொள்ள இந்த ஆய்வு வழிவகுக்கின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வு பேரவைக் கதைகளில் இடம்பெற்றிருக்கும் அகமரபு பற்றி ஆராய்கிறது. சிறுகதைகள் எனும்போது பேரவைக் கதைகள் எனும் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் சிறுகதைகள் மட்டுமே உட்படுத்தப்பட்டுள்ளன. மலாயாப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரவையால் ஒவ்வொரு ஆண்டும் ஏற்பாடு செய்யப்பட்டு வரும் பேரவைக் கதைகள் எழுதும் போட்டி இது நாள் வரை 29 தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் 2006ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை வெளிவந்த பேரவைக் கதைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆய்வில் தொல்காப்பியக் கோட்பாடு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டின் அடிப்படையில் அகத்திணை பாகுபாடு (கைக்கிளை மற்றும் பெருந்திணை), களவியல் வகைகள், களவுப் பிரிவு, கற்பு வகைகள், கற்புப் பிரிவு மற்றும் தலைவன் தலைவியரின் பண்புக் கூறுகள் போன்ற கூறுகள் மட்டுமே ஆய்வில் பகுப்பாய்ந்து கூறப்படவுள்ளன. ஒவ்வொரு பேரவைக் கதைத் தொகுப்பிலும் மாணவர் பிரிவு மற்றும் பொதுப் பிரிவு என்று இரண்டு பிரிவுகள் இருக்கும். இவ்வாய்வில் இவ்விரு பிரிவிலும் உள்ள அகமரபு சார்ந்த அனைத்துக் கதைகளும் உட்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வு ஆதாரங்கள்

இந்த ஆய்வுக்கு முதன்மைச் சான்றாதாரங்களாகப் பேரவைக் கதைகளும், இலக்குவனாரின் தொல்காப்பிய உரைநடையும் துணைமைச் சான்றாரங்களாகப் அகமரபு தொடர்பான ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.8.1 முதன்மை ஆதாரம்

இவ்வாய்வில் 2006 ஆண்டு முதல் 2016-ஆம் ஆண்டு வரையிலுள்ள பேரவைக் கதைகள் தொகுப்புகள் ஆகியவை முதன்மை ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.2 துணைமை ஆதாரம்

இவ்வாய்வின் துணைமை ஆதாரமாக இலக்குவனாரின் தொல்காப்பிய உரை நடை, ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள், தொல்காப்பியப் பொருளிலக்கணக் கோட்பாடுகள் பற்றிய ஆய்வு நூல்கள், போன்றவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 கலைச்சொல் விளக்கம்

இந்த ஆய்வில் பேரவைக் கதைகள் மற்றும் அகமரபு எனும் சொற்றொடருக்கும் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

### 1.9.1 பேரவைக் கதைகள்

பேரவைக் கதைகள் என்பது மலாயாப் பக்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேரவை மாணவர்களால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் சிறுகதைப் போட்டியாகும். இப்போட்டி இரண்டு பிரிவுகளாக நடத்தப்படுகிறது. அவை மாணவர்ப் பிரிவு மற்றும் பொதுப்பிரிவு ஆகும். போட்டியின் பொது பிரிவுக்கு வயது வரம்பின்றி எழுத்தாளர்கள் தங்களின் சிறுகதைகளை அனுப்பலாம். பேரவைக் கதைகள் 1986ஆம் ஆண்டு முதல் இன்று வரை தொடர்ந்து தொகுப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.9.2 அகமரபு

மக்களின் வாழ்க்கை முறையை அகப்பொருள், புறப்பொருள் எனப் பிரித்துத் தொல்காப்பியர் இலக்கணம் கண்டுள்ளார் (இலக்குவனார், 2009, ப.100). அகத்தே நிகழ்கின்ற காதல் ஒழுக்கம் ஏழு வகை ஆகும். அவை முதற்பொருள், கருப்பொருள் மற்றும் உரிப்பொருள் ஆகும். மக்களின் வாழ்வியல் முறையும் அவர்களின் சிந்தனைத் திறனும் இம்மூன்று பிரிவுகளில் அடங்கும். அகத்திணையானது கைக்கிளை, பெருந்திணை மற்றும் ஐந்திணையைக் கொண்டுள்ளது.

உள்ளத்தில் ஏற்படுகின்ற கிளர்ச்சி அல்லது உணர்வையே அகப்பொருள் என்கிறோம். அகப்பொருள் ஏழுவகைப்படுகின்றது (ஹம்ஸா, 2007, ப.14). அகப்பொருள் பாகுபாடுகளைக் கீழ்க்காணும் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த
அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை எனஏழு பெற்றித் தாகும்.
(தொல்காப்பியம்- நூற்பா 1)

அவை கைக்கிளை, ஐந்திணை, மற்றும் பெருந்திணை ஆகும். ‘கை’ என்றால் பக்கம் எனவும் ‘கிளை’ என்றால் உறவு என்றும் பொருள்படும். கைக்கிளை என்றால் ஒருதலைக் காமம் எனப்படும் (ஹம்ஸா, 2007, ப.8).

ஐந்திணைக்குரிய பொருள்கள் முதல், கரு மற்றும் உரி என்று மூவகைப்படும் (விசயரத்தினம், 2008, ப.14). முதற்பொருள் என்றால் காதல் ஒழுக்கத்தின் அடிப்படைப் பொருளான நிலத்தையும் பொழுதையும் குறிக்கிறது. பொழுதாவது பெரும்பொழுது மற்றும் சிறுபொழுது என்று இரு வகைப்படும். பெரும்பொழுது கார், கூதிர், முன்பனி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பின்பனி, இளவேனில், முதுவேனில் என்று ஆறு வகைப்படும். சிறுபொழுதாவது மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், மற்றும் ஏற்பாடு என ஆறு வகைப்படும். கருப்பொருள் என்றால் அதில் பிறக்கும் பொருட்கள் ஆகும். அவை ஆரணங்கு, உயர்ந்தோர், அல்லோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உனா, பறை, யாழ், பண், தொழில், எனப் பதினான்கு வகைப்படும். உரிப்பொருள் என்பது ஒழுக்கங்களைக் குறிக்கின்றது. அவை புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், மற்றும் இரங்கல் ஆகும். அகப்பொருளில் கூறப்படும் திறன் இரண்டு வகைகளான புனைந்துரை மற்றும் உலகியல் வாயிலாக வெளிக்கொணரப்படுகின்றது (இராமசுப்பிரமணியன், 2014, ப.13). அகப்பொருளில் சொல்லப்படும் திறனைத் தொல்காப்பியர்,

> அதுவே
> புனைந்துரை உலகியல் எனும்திறம் இரண்டினும்
> தொல்லியல் வழாமல் சொல்லப் படுமே.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(தொல்காப்பியம்- நூற்பா 2)

என்ற நூற்பாவால் விளக்குகிறார்.

வயது வந்த ஆணும் பெண்ணும் நட்புக் கொண்டு ஒழுகிக் காதலித்தல் களவு எனப்படுகிறது (இலக்குவனார், 2009, ப.118). களவியலில் மொழி ஒரு தடையாக இருக்காது. தலைவனும் தலைவியும் கண் பார்வையிலும் நெறிமிக்க அவரவர் நடவடிக்கைகளாலும் தங்களின் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வர். களவும் கற்பும் நெறி மிக்கவை என்பதைப் பறை சாற்றுவதே இக்கூற்று ஆகும். திருமணத்திற்கு முன்பே தலைமக்கள் தங்களின் அன்பை வெளிக்காட்டுதலை இயற்கை புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கன் கூட்டம், மற்றும் பாங்கியிற் கூட்டம் போன்ற களவுப் புணர்ச்சியின் வகைகளில் காணலாம் (இராமசுப்பிரமணியன், 2014, ப.29).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi